டால்பின்

DOLPHIN Primary Books

# சுந்தரத்தமிழ் இலக்கணப் பயிற்சி

## நூல் தொடர்



5

# சொல் (வகைகள்)

ஓர் எழுத்து தனித்து நின்றோ, பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ, பொருள் தந்தால் அது சொல் எனப்படும்.

எ.கா.: அம்மா. கை.

சொல், அதன் அமைப்பை யொட்டி, மூன்று வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.
1. ஒரு மொழி (தனி மொழி):– ஒரு சொல் தனிச்சொல்லாக நின்று ஒரு பொருளைத் தருவது.

எ.கா.:– தை, வா, நீ, தீ, வளி, நீர், நிலம், தாய், தந்தை, தவ, நனி, நிலத்தன், நடந்தான்.

2. தொடர் மொழி:– இரண்டு முதய பல சொற்கள் தொடர்ந்து நின்று பல பொருள்களைத் தருவது.

எ.கா.:– நிலம் வது, பஞ்சு மெல்து, நிலத்தை கடந்தான், நிலத்தை கடந்த நெடுமால், சாலப்பகை, நனி அழகு.

3. பொது மொழி:– ஒரு சொல் தனி மொழி போல் நின்று ஒரு பொருளையும், அதுவே தொடர் மொழி போல் பிரிந்து நின்று பல பொருள்களையும் உணர்த்தி இரு மொழிகளுக்கும் பொதுவாக வருவது.

எ.கா.:– தாமரை, வேங்கை, எட்டு, கொட்டு, எழுந்திருந்தான்.

சொல், இலக்கண அமைப்பையொட்டி நான்கு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது.

1. பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல்.
எ.கா.: பறவை, நிலவு.

2. செயலை உணர்த்தும் சொல் வினைச்சொல்.
எ.கா.: ஓடினான், பறக்கும்.

3. பெயரையும் வினையையும் இடமாகக் கொண்டு வருவது இடைச்சொல்.
எ.கா.: ஊரில், அவனை (இல், ஐ). வருவானோ (ஓ), போவேனோ (ஓ)

4. பெயர் வினையைச் சார்ந்து அவற்றின் தன்மையை விளக்குவது உரிச்சொல்.
எ.கா.: உறுமீன், சாலச்சிறந்தது. (உறு, சால)

## வினைச்சொல்

ஒரு தொழிலை உணர்த்திக் காலத்தைக் காட்டும் சொல் வினைச்சொல் எனப்படும். வினைச்சொல் முற்றுவினை. எச்சவினை என இருவகைப்படும்.

## வினைமுற்று

ஒரு பொருள் செய்த தொழிலைக் குறித்து வந்து முற்றுப்பெற்று நிற்கும் சொல் வினைமுற்று ஆகும். இது திணை, பால், எண், இடம், காலம் காட்டி நிற்கும். வினைமுற்று பயனிலையாகத்தான் வரும். வேற்றுமை உருபு ஏற்காது.

எ.கா. பார்த்தாள்.

| | | |
|---|---|---|
| திணை | – | உயர்திணை |
| பால் | – | பெண்பால் |
| எண் | – | ஒருமை |
| இடம் | – | படர்க்கை |
| காலம் | – | இறந்த காலம் |

### பயிற்சி எண். 26. பின்வரும் வினைமுற்றுக்களுக்குத் திணை, பால், எண், இடம் மற்றும் காலம் எழுதுக.

| வினைமுற்று | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 1. பறந்தது | | | | | |
| 2. வந்தனர் | | | | | |
| 3. ஆடினாள் | | | | | |
| 4. மேய்ந்தன | | | | | |
| 5. வாழ்வாள் | | | | | |
| 6. மிதந்தது | | | | | |
| 7. அழுகிறான் | | | | | |
| 8. உடைந்தன | | | | | |
| 9. வருவாள் | | | | | |
| 10. எடுத்தான் | | | | | |

## இரட்டைக் கிளவி

ஒரு சொல் அடுத்தடுத்து இரண்டு முறை நாம் உச்சரிக்கும் போது வேகமாகவும் இனிமையாகவும் வந்தால் அது இரட்டைக்கிளவி எனப்படும். இவை பிரிந்தால் பொருள் தராது.

எ.கா: பார்வதி கலகலவெனச் சிரித்தாள்.

**பயிற்சி எண்:33. பொருத்தமான இரட்டைக்கிளவி கொண்டு நிரப்புக.**

1. மரம் ____________ வென முறிந்தது.
2. குரங்கு ____________ வென மரத்தில் ஏறிற்று.
3. குளிர்காலத்தில் ____________ வென இருக்கும்.
4. வாசு ____________ வெனப் பேசுவான்.
5. குழந்தை ____________ வென இருக்கிறது.
6. அவன் சட்டை ____________ வென இருக்கிறது.
7. பட்டு ____________ வென மின்னுகிறது.
8. பாம்பு ____________ வென ஊர்கிறது.
9. தண்ணீர் ____________ வென ஓடியது.
10. பறவை சிறகைப் ____________ வென அடிக்கும்.

(சல சல, சட சட, குளு குளு, விறு விறு, வள வள, சர சர, பட பட, பள பள, தொள தொள, கொழு கொழு)

# தொலைக்காட்சி

**முன்னுரை:**

தொலைக்காட்சியை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான்பெயர்டு என்ற அறிஞர் 1926–ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். வானொயின் வளர்ச்சி நிலையே தொலைக்காட்சி. அறிவியல் ஆக்கங்களுள் ஒன்றான தொலைக்காட்சி ஒயின்பத்தோடு ஒளியின்பத்தையும் நமக்குத் தருகிறது.

**தோற்றமும் வளர்ச்சியும்:**

ஆரம்பத்தில் கறுப்பு வெள்ளையாகவே தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இருந்தன. குறிப்பிட்ட நேரம் மட்டுமே ஒளிபரப்பான நிகழ்ச்சிகள் இன்று 24 மணி நேரமும் ஒளிபரப்பாகின்றன.

நிகழ்ச்சிகள் படம்பிடிக்கப் படுகின்றன. அவை மின்காந்த அலைகளாக மாற்றப் படுகின்றன. தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள வானலைக் கொடி அவ்வலைகளைக் கவர்ந்து, ஒளி ஒயாக மாற்றிக் காட்டுகிறது.

**பயன்கள்:**

பல்வேறு நாடுகளின் வளங்கள், மக்களின் கலை, நாகரிகம், பண்பாடு முதயவற்றைத் தெரிந்து கொள்ள முடிகிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நம் கண்களுக்கும் சிந்தைக்கும் விருந்தளிக்கின்றன. உலகச் செய்திகள் அனைத்தையும் வீட்டினுள் இருந்தவாறே தெரிந்து கொள்ள முடிகிறது.

**தீமைகள்:**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளால் மக்களின் மனநலன் பாதிக்கப்படுகிறது. நீண்ட காலமாக ஒளிபரப்பாகும் நாடகங்கள் மக்களின் சீரிய வாழ்வைச் சிதைப்பனவாகவே உள்ளன. மாணவர்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிக நேரம் பார்ப்பதால் படிப்பிருந்து கடமை தவறுகின்றனர்.

**முடிவுரை:**

பொது அறிவு, விவசாயம், அறிவியல், விளையாட்டு, கல்வி, பண்பாடு தொடர்பான பயனுள்ள நிகழ்ச்சிகளைக் கண்டு களிப்போம். அறிவியன் கொடையான தொலைக்காட்சியை நன்முறையில் பயன்படுத்துவதே சிறப்பு.

பன்முறை

எழுதிப் பழகு.

## சொற்களை உருவாக்கு.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | க | டு | மா | ல் | க | ற் | றா | ழை | வா |
| ம் | ணி | மா | லை | க | ண் | பு | ழி | வ | தி |
| மா | த | ஆ | சி | ரி | ய | ர் | டு | ண் | ந |
| ளி | ம் | லை | கை | வ | டு | லை | சை | டு | ழ் |
| பு | த் | த | க | ம் | நா | இ | ந் | தி | யா |

.................................... ....................................

.................................... ....................................

.................................... ....................................

.................................... ....................................

.................................... ....................................

Designed, Printed & Published By :
**Sekar Publishers**
An ISO 9001:2000 Certified Company
3/1078/2, Meenampatti, Sattur Road,
Sivakasi - 626189 Tamilnadu - India.
Tel : +914562 274132 Fax: +914562 274133

ISBN 978-93-812409-95-1
9789381240991

Log on to: www.sekardolphin.com